மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, இந்த புதிய கண்மாயிலிருந்து ..13 மில்லியன் கன அடி அளவுக்கு தண்ணீர் தேக்கக்கூடிய புதிய ஏரி அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 178 ஏக்கா புதிய நிலங்கள் - இதுவரை பாசன வசதி இல்லாத நிலங்கள்— பாசன வசதியடையும். இப்போது இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். டெண்டர், மற்ற விவரங்கள் எல்லாம் முடிந்துவிட்டனவா என்ற குறிப்பு இல்லை. முடிக்கப்படாமல் இருந்தாலும், உடனடியாகத் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

சித்தமல்லி கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம்

* வினா எண். 960 —திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடையார் பாளையம் தாலுகா சித்தமல்லி கிராமத்தில் 7½ கோடி ரூபாய் திட்டத்தில் ஏரி ஒன்று வெட்டி அமைப்பதற்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் குறுக்கே ரூ. 240 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். 846 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன உறுதிப்பெறும்.

திரு. எஸ். இராசாராமன் : துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் இந்தத் திட்டம் 7½ கோடி ரூபாய்க்குப் போடப்பட்டதாகத் தெரிகிறது. அதை ஏன் 2.40 கோடி ரூபாயாகக் குறைத்தது இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, சென்ற ஆட்சியில் எத்தனை கோடிக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. அவர்களே, அதை நிறைவேற்றியிருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. இந்த ஆட்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்ததற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்திருக்க வேண்டும்.

திரு. எஸ். இராசாராமன் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி இந்த அளவுக்குத் திட்டம் போட்டு, நிறைவேற்றுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும்கூட 7½ கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்றினால் இன்னும் அதிகமான பாசன வசதி பெற முடியும். அரசுக்கு மிகவும் வேண்டியவர்களுடைய நிலம் பாதிக்கும் என்பதால்தான் அந்தத் திட்டம் இந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

1981 மே 8]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது அங்கே கிடைக்கக் கூடிய பல்வேறு தகவல்களைக் கணக்கிலே கொள்கிறோம். மேலும் கூடுதலாக எந்த அளவுக்கு புன்செய் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி கொடுக்க முடியும் என்பதை முக்கியமாக கருத்திற் கொண்டு திட்டங்களைத் தீட்டுகிறோம். இத்திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்; 846 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன உறுதி பெறும். அந்த வகையில் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இதற்குமேல் அங்கே பெரிய திட்டம் அமைக்கத் தேவையில்லை என்றும், இருக்கிற நீர் அளவைக் கருதிப்பார்க்கும்போது இதுவே சரியானது என்று கருதுவதாலும் இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்புதலும் அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியில் சுண்ணாம்பு சிப்பிகள் எடுக்க குத்தகை விடும் திட்டம்.

* வினா எண் 1025—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், முதுகுளத்தூர் தொகுதியில் அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை போன்ற இடங்களில் சுண்ணாம்பு சிப்பிக்கு டன் 1க்கு ரூ. 9–86 வசூல் செய்யவேண்டும் என்பதை அரசு வட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆண்டுக்கு அதன் வருமானம் என்ன?

(இ) குத்தகைதாரருக்கு விடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) 1980ம் ஆண்டு வருமானம்; உரிம வரி (Royalty) தலவரி (Local Cess) மற்றும் தலவரி மீது உபரிவரி (Local Cess surcharge) உட்பட ரூ. 7 ,578 65 ஆகும்.

(இ) தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை விடும் உத்தேசம் அரசுக்கு இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனம் இராமநாதபுரம் வட்டம், அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை கிராமங்களில் சுண்ணாம்பு சிப்பி எடுக்க குத்தகை கோரி மனுச் செய்துள்ளது. அம்மனுவின் பேரில் அரசுக்கு, சென்னை தொழில் மற்றும் வணிக இயக்குநர் 20 வருடக் குத்தகைக்கு சிபாரிசு செய்து உள்ளார். அரசு விதிமுறைகளுக்கிணங்க தமிழ்நாடு கனிம நிறுவனத்தினரின் விண்ணப்பத்தின்பேரில் ஆணை பிறப்பிக்கவிருக்கிறது.